DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Cross Examination of Witness PW-1

27.11.2019

அசா.1 - ஜெய்நிவாசன்

<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 11, 14, 15 மற்றும் 21 வது எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>

ADSP மற்றும் காவல்துறையினர் என்னை விசாரித்தபோது இவ்வழக்கின் 21 வது எதிரி ஞானசேகரனைப்பற்றி நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் சிறையிலிருந்து பிணையில் வந்த பிறகு புலன் விசாரணை அதிகாரியை நான் எப்போது சந்தித்தேன் என்றால், சரியாக ஞாபகம் இல்லை. சிறையிலிருந்து பிணையில் வந்த பிறகு புலன் விசாரணை அதிகாரியை எத்தனை மாதங்கள் கழித்து நான் சந்தித்தேன் என்றால், 3, 4 மாதங்கள் கழித்து நான் சந்தித்திருப்பேன். குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் நீதிமன்றத்தில் கொடுக்கலாம் என எனக்கு முதன்முதலாக எப்போது எண்ணம் தோன்றியது என்றால், சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. குவிமுச 164 பிரிவின் கீழாக வாக்குமூலம் கொடுப்பதற்கு நீதிமன்றத்தில் கொடுத்த மனுவை காவல் துறையினர்தான் தயார் செய்து கொடுத்தனர் என்று எனது முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில், வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் என்னிடம் கேட்டறிந்துதான் அந்த மனுவை தயார் செய்தார்களா என்றால், அனைத்து விவரங்களும் என்னிடம் கேட்டறியவில்லை. குவிமுச 164 பிரிவின் கீழாக வாக்குமூலம் கொடுப்பதற்கான மனு எங்கு வைத்து

தயாரிக்கப்பட்டது என்றால், எனக்கு தெரியவில்லை. அந்த மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. குவிமுச 164 பிரிவின் கீழாக வாக்குமூலம் கொடுப்பதற்கான மனுவை யார் எழுதினார்கள் என்பதோ அல்லது தட்டச்சு செய்யப்பட்ட ஒன்றா என்றால், தெரியவில்லை. அந்த மனு தயாரிக்கப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ காவல் துறையினர் என்னிடம் எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றால், சரிதான். அந்த மனு தயாரிப்பதற்கு எவ்வளவு நேரமானது என்று சொல்லமுடியுமா என்றால், தெரியாது. அந்த மனுவை தயாரிக்கும் முன் புலன்விசாரணை அதிகாரி, காவல் துறையினரை கலந்து ஆலோசித்தாரா என்றால், எனக்கு தெரியாது. அந்த மனுவைப் பொறுத்தமட்டில் எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். அந்த மனுவைப் பொறுத்தவரையில் பிரமாண வாக்குமூலம் தயாரித்து கையெழுத்து பெறப்பட்டதா என்றால், அதைப் பற்றி தெரியாது. மேற்படி மனுவிற்காக வேண்டி பிரமாண வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றும், நான் பிரமாண வாக்குமூலத்திற்கான தகவல்கள் எதுவும் தரவில்லை என்றும், நான் பிரமாண வாக்குமூலத்திற்காக கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னால், எனக்கு தெரியவில்லை. காவல்துறையினர் மேற்கண்ட மனுவிற்காக பிரமாண வாக்குமூலம் தயாரித்து என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை என்றால், சரிதான். குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலத்தின் சாதக, பாதகங்களை காவல் துறையினர் எனக்கு அறிவுறுத்தினரா என்றால், இல்லை. எனக்கு குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் கொடுப்பதற்கான நீதிமன்ற அழைப்பாணை யார் மூலமாக சார்வு செய்யப்பட்டது என்றால், CBCID காவல்

துறையினர் என்னிடம் நீதிமன்ற அழைப்பாணை கொடுத்தனர். காவல்துறையினரிடம் மன்னிப்பு வாங்கிக்கொடுக்குமாறு நான் ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை. CBCID அதிகாரிகள் C1, C2 மற்றும் C3 வாக்குமூலங்கள் கொடுப்பதற்கு முன்பாக, நான் போலீசாரிடம் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலங்களை கொண்டு தயாரிக்கப்பட்ட மனு என்னிடம் காண்பிக்கப்பட்டதா என்றால், அதைப் பற்றிய சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது. CBCID அலுவலகத்தில் நான் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட சமயத்திலிருந்து, C1 க்காக நான் வாக்குமூலம் கொடுக்கும் சமயம் வரை CBCID அதிகாரிகள் யார்யார் என்னை சந்தித்தார்கள் என்றால், யாரும் என்னை சந்திக்கவில்லை. அதே காலகட்டத்தில் என்னைப்போன்று எதிரிகள் யாரேனும் காவல் துறையினரால் விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால், எனக்கு தெரியாது. குவிமுச 164 வாக்குமூலம் கொடுக்கப்பட்ட சமயத்திற்கு பிறகு காவல்துறையினர் என்னை சந்தித்தனரா என்றால், இல்லை. இந்நீதிமன்றத்திற்கு முதன் முதலாக குவிமுச 306 பிரிவின் கீழான விசாரணைக்காக வேண்டி எந்த தேதியில், யாரால் எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது என்றால், ஞாபகம் இல்லை. குவிமுச 164 பிரிவின் கீழ் வாக்குமூலம் கொடுத்த பின்னிட்டும், குவிமுச 306 பிரிவின் கீழான விசாரணைக்கான நடவடிக்கைகளுக்கு முன்பும் எப்போதாவது, பொதுமன்னிப்பு பெற்றுத் தரவேண்டி நான் காவல் துறையினரிடம் கேட்டேனா என்றால், இல்லை. என்னை அப்ரூவராக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் எனக்கு எதிராக பிரயோகிக்கப்படும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. நான், மற்ற எதிரிகளுடன்

அண்ணா நகர், ராயப்பேட்டை, வில்லிவாக்கம் போன்ற இடங்களில் 11.08.2012 ம் தேதி இரவு 10.30 மணி முதல் 12.08.2012 ம் தேதி அதிகாலை 4.00 மணிவரை இருந்தேன் என்பதற்கான ஆவணங்களின் அடிப்படையிலான சாட்சிகள் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை. 23.09.2013 ம் தேதி என்னை கனம் ஈரோடு JM நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள் என்றால், சரிதான். காவல் துறையின் எந்த அதிகாரி என்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார் என்றால், அது எனக்கு தெரியவில்லை. A4 ஆனந்தராவ், A6 சீனிவாரராவ், A7 சுபாஷ்குமார் தாஸ், A8 ரமேஷ் என்கிற சத்தியாரமேஷ், A9 R. குமார் ஆகிய அனைவரும் இவ்வழக்கிற்கு முன்புவரை எனக்கு அறிமுகமில்லாத நபர்கள் என்றால், சரிதான். குவிமுச 164 பிரிவின் கீழான நடவடிக்கைளுக்கு முன்பாக நான் காவல் துறையினரிடம் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தில் இவ்வழக்கில் உள்ள மற்ற எதிரிகளின் பெயர்கள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டு எழுதப்பட்டதா என்றால், அனைத்து எதிரிகளின் பெயர்களையும் நான் குறிப்பிடவில்லை. நான் சொல்லுவது போல் அவ்வாறான வாக்குமூலம் எதுவுமே காவல் துறையினரிடம் கொடுக்கவில்லை என்பதால் தான், அவ்வாறான வாக்குமூலம் எதுவும் இதுவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், தெரியாது. எனது தந்தை RPF SI யாக உள்ளதால், அவருக்கு காவல் துறையினரால் தொடர்ந்து நெருக்கடி கொடுக்கப்பட்டதால் நான் அந்த நிர்பந்ததற்கும், எனது தந்தையின் வேலைக்கும் பயந்து, அப்ரூவராக மாற வேண்டி நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லச் சொல்லி காவல் துறையினரால் கட்டாயப்படுத்தப்பட்டேன் என்றால், சரியல்ல. காவல்துறையினர் சந்தேகத்தின் அடிப்படையில் சட்டவிரோத காவலில்

ஓட்டலில் 18.08.2012 முதல் 21.08.2012 ம் தேதி வரை வைத்து என்னை துன்புறுத்தி, நிர்பந்தப்படுத்தி ஆதாரம் எதுவும் இல்லாமல் என்னையே பொய்யாக இந்த வழக்கில் தொடர்புபடுத்தி விட்டனர் என்றால், சரியல்ல. 22.08.2012 ம் தேதி ADSP மற்றும் காவல் துறையினர் என்னை விசாரித்தபோது, சா.பொ.1 செல்போன் மற்றும் சா.பொ.2 பணம் ஆகியன ஈரோடு நகர காவல் ஆய்வாளரால் 22.08.2012 ம் தேதி புலன் விசாரணை அதிகாரி என்னிடம் கைப்பற்றியதாக வாக்குமூலங்களில் சொல்லவில்லை என்றால், சரிதான். சா.பொ.1 மற்றும் 2 ஆகியன ஈரோடு நகர காவல் ஆய்வாளரால் 22.08.2012 ம் தேதி புலன் விசாரணை அதிகாரி என்னிடம் கைப்பற்றப்பட்டதாக குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் C1 ல் சொல்லவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. சா.பொ.1 மற்றும் 2 ஆகியவற்றுக்கும், எதிரிகளுக்கும் மற்றும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. என்னைக் காவல் துறையினர் மிரட்டி, அச்சுறுத்தி சம்பந்தமில்லாத நபர்களைப் பற்றி பொய்யாக சொல்ல வைத்துள்ளார்கள் என்றால், சரியல்ல. எனவேதான் நான் தாக்கல் செய்த பிணை மனுக்கள் அனைத்திலும் நான் நிரபராதி என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

(21.08.2019, 09.10.2019 மற்றும் இன்றைய தினம் ஆகிய தேதிகளில் 11, 14, 15 மற்றும் 21 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணையை முழுவதுமாக 4, 6, 7, 8 மற்றும் 9 ஆகிய எதிரிகள் ஏற்றுக் கொள்கின்றனர்.)